பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கோவை

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்




ஏ.வி.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரி

Recognized Under Section 2(f) & 12 (B) of UGC Act 1956, Accredited by NAAC
Affiliated to Periyar University, Salem & Approved by AICTE, New Delhi, An ISO Certified Institution
Attur Main Road, Ramalingapuram, Salem - 636 106.


தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்




SHANLAX PUBLICATIONS
61, 66, T.P.K. Main Road
Vasantha Nagar, Madurai - 3
www.shanlaxpublications.com
shanlaxpublications@gmail.com

தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்

© AVS கலை மற்றும் அறிவியல் கல்லூரி, July 2014

ALL RIGHTS RESERVED. No part of this Publication may be reproduced, stored in a retrieval system or transmitted, in any form or by any means, mechanical, photocopying, recording or otherwise, without prior written permission of the author or publisher.

**ISBN: 978-93-80686-62-2**

***Published by***

**Shanlax Publications**

*61,66, T.P.K Main Road, Madurai*

*0452-4208765, 9600303383*

*shanlaxpublications@gmail.com*

*www.shanlaxpublications.com*

***Printed at***

**Shanlax Press**

*61, 66, T.P.K Main Road, Madurai*

*0452-4208765, 9942266683*

*shanlaxpress@gmail.com*

*www.shanlaxpress.com*

ஆக்கியோர் குழு

- ♣ முனைவர். வே. சங்கர நாராயணன், எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்., பி.எச்.டி.,
- ♣ பேரா. இரா. அனுஷா, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.,
- ♣ பேரா. உ. நிர்மலா, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.,
- ♣ பேரா. இரா. கார்த்திகேயன், எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.,
- ♣ பேரா. சு. மெய்யழகன், எம்.ஏ., எம்.ஃபில்.,
- ♣ முனைவர். கி. முகிரலசி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எச்.டி.,
- ♣ பேரா. சி. செல்வபாரதி, எம்.ஏ., எம்.ஃபில்.,

தமிழ்த்துறை

ஏ.வி.எஸ். கலை அறிவியல் கல்லூரி

ஆத்தூர் மெயின் ரோடு, இராமலிங்கபுரம், சேலம் 636 106.

| வ.எண் | பொருள் - ஆய்வாளர் | பக்க எண் |
|---|---|---|
| 48. | குடும்பவிளக்கு – முதியோர்காதலில் கூட்டுக்குடும்ப இருப்பு<br>**சௌமியா** | 246 |
| 49. | தமிழ் இலக்கியங்களில் கவிச்சிந்தனைகள்<br>**ப.பா.சுபாஷினி** | 250 |
| 50. | சங்க இலக்கியத்தில் உளவியல் பாங்கு<br>**முனைவர் கி.சுதா** | 254 |
| 51. | முள்ளும் முல்லையும்<br>**முனைவர் த.சுதாமதி** | 258 |
| 52. | அகநானூறு காட்டும் நெய்தல் நில மக்களின் வாழ்க்கை முறை<br>**சு.தமிழரசி** | 262 |
| 53. | நாட்டுப்புறப் பாடல்களில் வாழ்வியல் சிந்தனைகள்<br>**இரா.திருப்பதி** | 265 |
| 54. | பதிற்றுப்பத்தில் (5-ம் பத்து) வாழ்க்கைச்சிந்தனைகள்<br>**உ. நிர்மலா** | 270 |
| 55. | உள்ளுறையும் அதன் பயன்பாடும்<br>**முனைவர் வீ.இராமமூர்த்தி** | 273 |
| 56. | வள்ளுவம் காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்<br>**லோ.வாணிசக்திவேல்** | 279 |
| 57. | புறநானூறு காட்டும் வாழ்வியல்<br>**க. விஜயராகவன்** | 283 |
| 58. | ஐந்திணை ஐம்பது உணர்த்தும் சிற்றுயிர்களின் வாழ்வியல்<br>**ஜீவ பாரதி** | 287 |
| 59. | அகநானூற்றில் உணவு<br>**ர.பரமேஸ்வரி** | 290 |
| 60. | தமிழலக்கியங்களில் விருந்தோம்பல்<br>**மு. கார்த்திகா** | 294 |




# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்

THOUGHTS OF LIVING IN TAMIL CLASSICAL LITERATURE


**முனைவர். எஸ். குமரன்**
மலாயாப் பல்கலைக்கழகம், கோலாலும்பூர், மலேசியா
DR. S. KUMARAN
UNIVERSITI MALAYA, KUALA LUMPUR


## முன்னுரை

இலக்கியங்கள் சமூகத்திலிருந்து தோன்றுகின்றன. இதற்குச் சமூகத்தின் செயல்பாடுகளும் நிகழ்வுகளும் அடித்தளமாகின்றன. ஒன்றன் மீது ஒன்று ஆளுமை செலுத்தும் சமூகத்தின் மொழியாக்கமும் பழக்க வழக்கங்களும் இலக்கியங்களின் தோற்றப் பின்புலங்களாக இருக்கின்றன. இலக்கியம் பண்பாட்டின் பிரிக்க இயலாத உறுப்பாகும். ஒரு குறிப்பிட்ட காலக்கட்ட இலக்கியங்களை ஆராய்கின்ற போது அதன் சமூக வாழ்வியல் பின்புலத்தை உணர முடியும். மற்றொரு வகையில் சமூக வாழ்வியல் பின்புலத்தை ஆராய்கின்ற போது அக்காலக்கட்ட இலக்கியங்களின் தோற்றுவாயை அறியலாம். சமூகமும் இலக்கியமும் ஒன்றையொன்று சார்ந்து இயங்குகின்றன.

## அறம்

தனிமனிதன் சமூகத்தின் நெறிமுறைகளைப் பின்பற்றி வாழ முயலும்போது அவன் சமுதாயத்தின் ஓர் அங்காமாகின்றான். சமூகத்திலிருந்து எந்தவொரு தனிமனிதனும் வேறுபட்டு வாழ முடியாது. தனிமனிதன் தனது செயல்களையும் வாழ்வியல் கடமைகளையும் செயல்படுத்த வேண்டுமென்றால் அவன் சார்ந்துள்ள சமூக அமைப்புகளில்லாமல் இயங்க முடியாது. சமூகம் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியவை, வேண்டாதவை என்று வற்புறுத்தப்படுவன அறமாகும். மனித இயக்கத்தின் வழ்வியல் அடிப்படைப் பண்புகளே அறமாகும்.

## விழுமங்கள்

வாழ்வியல் அறங்களும் சட்டங்களும் சமுதாயத்தால் பின்பற்றப்படுகிறபோது சமுதாயம் வளரும். சமூதாயம் உயர்ந்த வாழ்வியல் விழுமங்களைப் பெற்றிருக்கும். வாழ்வியல் விழுமங்கள் நடத்தைகளாகவோ, இலட்சியமாகவோ, போர் குணமாகவோ, அமைதியாகவோ, சகிப்புத்தன்மையுடையதாகவோ, நேர்த்தியானதாகவோ விடாமுயற்சியுடையதாகவோ அமையப் பெறலாம். சமுதாயம் பெற்றிருக்கும் அல்லது கடைப்பிடிக்கும் அல்லது நடைமுறைப்படுத்தும் வாழ்வியல் விழுமங்களின் அடிப்படையிலேயே அச்சமுதாயத்தின் வளர்நிலை அமைந்திருக்கும். ஒரு சமுதாயம் பெற்றிருக்கும் அறக்கோட்பாடுகளும், சட்டத் திட்டங்களும் உயர்ந்த வாழ்வியல் விழுமங்கள் தோன்றுவதற்குக் காரணங்களாகின்றன.